முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை!
அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 28 திகதி முதல்
சோபகிருது வருடம் ஆனி மாதம் 03 திகதி வரை
(11.06.2023 ஞாயிறு முதல் 18.06.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தருமபலம் கொண்ட பாரதமே
   தன்னார்வத் தயவுநிறைந்த தமிழகமே
   வருங்கால பலனாக இந்தியாதமிழக
   வளர்ச்சிக்குறித்த வார ஆசிதனை
2. ஆசிதனை அரங்கஞானி கேட்க
   அகத்திய மகரிஷி யானும் உரைப்பேன்
   நேசம்பட சோபகிருது விடைதிங்கள் எழுநான்கு திகதிமேல்
   நல்மிதுன திங்கள் சூல திகதிவரை
3. வரை நடக்கும் நிகழ்வாக
   வருங்கால பலனாக உரைப்பேன்
   திரைமறைவில் நடக்கின்ற
   தேசத்தின் அதிகார குற்றங்கள்
4. குற்றங்கள் அனைத்தும் இனி
   கூறிடுவேன் அம்பலமாகி சடுதி
   குற்றங்கள் குறையும் கரையும்
   குறைவெல்லும் மாற்றம் நடக்கும்
5. நடக்கின்ற நல்லச் சூழலை
   நாட்டை ஆளும் கீழ்மேல் தலைமை
   கடக்கின்றேன் என அலட்சியம்
   கொண்டுவிடா முடிவு காணும்படி

6. காணும்படி செயலை காண
கலியில் பாதுகாப்பு மிக்க
ஞானத்தலைமையாக மாறியே
நம்பிக்கை தரும் ஆளுமையாகத் தேறி
7. தேறியே தமிழகம் இந்தியா
திடமான ஆளுமை நடத்தி
வறுமையை விரட்டி மீட்டு
வளர்ச்சி தரும்அரசாக மாறும்
8. மாறுதல் மக்களிடை மட்டும்
மண்ணுலகில் கண்டால் போதாது
ஆறுதலாக அரசுக்கு உள்ள
அதிகார வர்க்கங்கள் அனைத்தும்
9. அனைத்தும் ஞான வழிவந்து
அவதார அரங்கமகா ஞானி
துணைபட தருமஞான வழியை
தொடர்ந்து ஏற்று தேசநலம் காக்கும்
10.காக்கும்படி சேவை ஆற்றிட
களங்கமற ஆளுமைகளும்
தேக்கமின்றி ஞான ஆட்சித்தரும்
தேசிகன் அவதார நோக்கம் பூர்த்திபடும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 28ம் நாள் 11.06.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி மாதம் 03ம் நாள் 18.06.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள நிகழ்வுகள் :

தருமவான்கள் அதிகம் அதிகம் தர்மங்களை செய்து தர்மபலம் மிக்க பாரத தேசமே தயவு உள்ளம் கொண்ட மக்கள் நிறைந்த தமிழகமே இந்தியா தமிழகத்தின் வளர்ச்சி குறித்து அரங்க மகான் கேட்க சோபகிருது வருடம் வைகாசி மாதம் 28ம் நாள் 11.06.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி மாதம் 03ம் நாள் 18.06.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார

ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

வெளியார் அறிய மாட்டார்கள் என்றே எண்ணி திரைமறைவில் நடக்கின்ற அதிகார குற்றங்கள் அனைத்தும் இனி வரும் காலங்களில் பொதுமக்கள் அறிய அம்பலமாகும். அதனால் நாட்டினில் குற்றங்கள் வெகுவாக விரைந்து குறையும் படிப்படியாக குறைந்து கரையும். குற்றங்களை தடுக்கும் முறைகளும் மாற்றம் அடைந்து குற்றங்கள் நடப்பதை தடைசெய்யும் நாட்டினில் நல்ல சூழல் உருவாகும்.

இந்தவித நல்ல சூழ்நிலையை பயன்படுத்தி மத்திய மாநில அரசுகள் விரைந்து செயல்பட்டு நல்ல முடிவுகளை உறுதிபட எடுத்து குற்றங்கள் நடக்காதவாறு தக்க ஏற்பாடுகளை நிரந்தரமாக செய்திட வேண்டும். அப்படி குற்ற தடுப்பு நடவடிக்கைகளை உறுதியுடன் செயல்படுத்தினால் நாட்டின் பாதுகாப்பும் பலமாகிடும், ஆட்சி புரிபவர்களும் திறமையான தலைமைகளாக ஞானத்தலைமையாக மாறி மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் சிறந்த ஆளுமையாக மாறி உறுதியுள்ள ஆளுமை நடத்தி நாட்டின் வறுமையை விரட்டி வறுமையின் பிடியில் இருந்து மக்களை மீட்டு பாதுகாக்கும் வளர்ச்சி மிக்க அரசாக மாறிடும்.

இவ்வித மாற்றங்களை மக்கள் மத்தியில் செயல்படுத்தினால் மட்டும் போதாது அரசின் அதிகார வர்க்கங்களும் ஞானவழிக்கு வந்து கடவுள் நம்பிக்கையுடன் பாவ புண்ணியங்களுக்கு பயந்து நடந்து தர்மத்தின் வழியை உபதேசித்து வழிநடத்தும் ஆறுமுக அரங்க மகானின் துணைபட அரங்க மகான் கூறும் தயவு மிக்க தரும ஞானநெறியை ஏற்று கடைப்பிடித்து நாட்டின் நலனை காத்து தொண்டுள்ளத்துடன் செயல்பட்டால் நாட்டின் ஆட்சி ஞானஆட்சியாகும் ஆட்சி செய்பவரும் ஞானஆட்சி தருவார்கள். ஞானஆட்சியை உலகில் உருவாக்கும் அரங்க மகானின் நோக்கமும் பூர்த்தி ஆகுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–